# திருவருகைக்காலம் 1 வது ஞாயிறு

## திருவழிபாடு ஆண்டு B

**இன்றைய வாசகங்கள்:**

இறைவாக்கினர் எசேக்கியேல் நூலிலிருந்து வாசகம் 63: 16-17, 64:1,3-8,

திருப்பாடல்: 80:1-2,14-15,17-18,

திருத்தூதர் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய

முதல் திருமுகத்திலிருந்து வாசகம்: 1:3-9,

மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 13: 33-37

## திருப்பலி முன்னுரை:

அன்புமிக்க சகோதர சகோதரிகளே! இயேசுவே ஆண்டவர் என்னும் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். **இன்று திருவருகைக்காலம் முதல் ஞாயிறு.** அருளும் அமைதியும் வழங்கும் ஆண்டவரின் அன்புப் பிரசன்னத்தில் ஒரே குடும்பமாக ஒன்று கூடியுள்ளோம்.

இன்று தாய் திருஅவை புதியதொரு வழிபாட்டு ஆண்டை ஆரம்பிக்கிறது. நமது இறைவனைக் குழந்தை வடிவில் எதிர்பார்த்துக் காத்திருக்கும் திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறன்று உலகின் முடிவில் இறைவன் மீண்டும் வருவதை நினைவுறுத்தும் நற்செய்தி நமக்குத் தரப்பட்டுள்ளது.

நம்முடைய நற்செயல்கள், முன்மாதிரிகையான வாழ்கை ஆகியவற்றின் வழியாக கிறிஸ்துவுடன் இணைக்கப்பெற்று, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுவதற்காக நம்பிக்கையோடும், தூய வாழ்வோடும் காத்திருக்கும் நமக்கு அருள்கொடை எதிலும் குறைவே இல்லை என்பதும், நாம் எல்லா வகையிலும் செல்வர்களாவோம் என்னும் நற்செய்தியும் இன்று நமக்கு வழங்கப்படுகின்றது. எப்பொழுதும் கடவுளைச் சந்திக்கத் தயாராய் இருக்கவேண்டும், நமது பாவ வாழ்வை ஏற்றுக் கொண்டு மனமாற்றத்திற்கான வழிகளைத் கண்டடைய வேண்டும் என்ற சிந்தனைகளும், நமக்குத் தரப்படுகின்றன.

இந்தச் சிந்தனைகளை நாம் நம் மனத்தில் ஆழமாகப் பதித்து, ஆண்டவரே நீரே எங்கள் தந்தை: நாங்கள் களிமண், நீர் எங்கள் குயவன்: நாங்கள் அனைவரும் உம் கைவேலைப்பாடுகளே, எங்கள் பாவங்களிலிருந்து எம்மை விடுவித்து, புனித பாதையில் வழி நடக்க வரம் தாரும்: என்று இத் திருப்பலி வழியாகச் செபிப்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**1. கெருபுகளின் மீது வீற்றிருப்பவரான தந்தையே இறைவா!**

எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் அனைவருக்காகவும் மன்றாடுகின்றோம்: அவர்கள் அனைவரும் ஆன்மிக வாழ்விற்கும், விசுவாசத்திற்கும் அச்சுறுத்தலாக வரும் அனைத்துத் தீய சக்திகளையும் முறியடித்து, அவைகள் மட்டில் எப்பொழுதும் கவனமாயிருக்கவும், விழிப்பாயிருக்கவும், விவேகத்தோடு செயற்படவும் வேண்டிய அருளாற்றலை அவர்களுக்கு அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**2. உம்மை நம்பியிருப்போருக்காகச் செயலாற்றும் தந்தையே இறைவா!**

உமது பிள்ளைகளாகிய நாங்கள் ஒவ்வொருவரும் உமக்கெதிராகப் பாவம் செய்தோம், தீட்டுப்பட்டவரைப்போல் உள்ளோம், எங்கள் நேரிய செயல்கள் எல்லாம் அழுக்கடைந்த ஆடைபோல் ஆகிவிட்டன என்னும் எங்கள் சமகால வாழ்வைத் தாழ்மையுடன் ஏற்றுக்கொண்டு மனமாற்றம் பெற்று வாழ்ந்திடும் அருளை எமக்கு அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**3. பேரன்பையும், மீட்பையும் கொண்டுள்ள தந்தையே இறைவா!**

நோயினால் தாக்கப்பட்டு வீடுகளிலும், மருத்துவ இல்லங்களிலுமிருந்து வேதனையுறும் அனைவரினதும் நோயைக் குணமாக்கி மகிழ்ச்சி நிறைந்த வாழ்வை அவர்களுக்கு அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**4. பேராற்றலையும், நிறை ஞானத்தையும் உடையவரான தந்தையே இறைவா!**

இன்று உலகிலே புதியவற்றைக் கண்டுபிடித்து அறிமுகப்படுத்தும் அனைவரும் மனித நலத்திற்கும், மனித ஒழுக்கத்திற்கும், இயற்கையின் சீரான வளர்ச்சிக்கும் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் அனைத்தையும் தயாரிக்கும் ஞானத்தையும், மனப் பக்குவத்தையும் அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**5. அன்பே உருவான எம் இறைவா!**

இயற்கைப் பேரிடராலும், பொருளாதார மாற்றங்களால் அவதிபடும் மக்களுக்கு நலமும் வளமும் நிறைவான வாழ்வும் கிடைத்திடவும், ஆள்வோரின் கரிசனையும், பாதுகாப்பும் பெற்றடவும், சிரம்மின்றிப் பொருளாதார ஏற்றம் பெற்றடத் தேவையான வரங்களைப் பொழியவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.